## பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

செ.வெ.எண். 21 நாள்: 26.01.2025

### குடியரசு தினத்தை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை இன்று ஏற்றிவைத்து மரியாதை செலுத்தினார்.

பெருநகர சென்னை மாநகராட்சியில் இன்று (26.01.2025) குடியரசு தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் தேசியக் கொடியினை ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார். தொடர்ந்து, மூவர்ண பலூன்களை விண்ணில் பறக்க விட்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மேயர் அவர்கள் தேசிய மாணவர் படையினர், சாரண, சாரணியரின் அணிவகுப்பு மரியாதையினை ஏற்றுக்கொண்டார்.

தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சியின் அலுவலர்களுக்கு ரூ.9.93 கோடி மதிப்பில் 1,320 நவீன டிஜிட்டல் கம்பியில்லா பேசும் கருவிகள் (Modern Digital Walkie Talkie) வழங்குவதன் அடையாளமாக ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., அவர்கள் உள்ளிட்ட 20 அலுவலர்களுக்கு மாண்புமிகு மேயர் அவர்கள் நவீன டிஜிட்டல் கம்பியில்லா பேசும் கருவிகளை வழங்கினார். இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை பள்ளி மாணவ, மாணவியரின் கண்கவரும் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன.

பின்னர், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு முறையாக சொத்துவரியினை உரிய காலங்களில் தாமதமில்லாமல் செலுத்தியவர்கள் மற்றும் அதிக சொத்துவரி செலுத்தியவர்களை கௌரவிக்கும் வகையில் சொத்து உரிமையாளர்களுக்கு பாராட்டுக் கடிதங்களை (Letter of Appreciation) மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

மேலும், 2023-24ஆம் ஆண்டு குடும்ப நலத் திட்டப்பணிகளில் மாவட்ட அளவில் சிறந்த சேவை வழங்கிய மருத்துவம் சார்ந்த அலுவலர்களுக்கு தமிழ்நாடு மாநில குடும்பநல இயக்கத்தின் பதக்கம் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களையும், பெருநகர சென்னை மாநகராட்சியில் சிறப்பாகப் பணியாற்றிய 140 அலுவலர்கள் மற்றும் பணியாளர்களைப் பாராட்டிச் சான்றிதழ்கள் மற்றும் பதக்கங்களையும், அணிவகுப்பு மற்றும் கலைநிகழ்ச்சிகளில் பங்குபெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்களையும் மாண்புமிகு மேயர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர்கள் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ. விஜயா ராணி, இ.ஆ.ப., துணை ஆணையாளர்கள் திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., (பணிகள்), திரு.ம.பிரதிவிராஜ், இ.ஆ.ப., திரு.எம்.பி.அமித். இ.ஆ.ப., (தெற்கு வட்டாரம்), திரு.கே.ஜெ.பிரவீன்

குமார், இ.ஆ.ப., (மத்திய வட்டாரம்), திரு.கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., (வடக்கு வட்டாரம்), மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் திரு.ந.இராமலிங்கம், நிலைக்குழுத் தலைவர்கள் திரு.க.தனசேகரன் (கணக்கு), திரு.த.விசுவநாதன் (கல்வி), டாக்டர் கோ.சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு (ம) நிதி), மண்டலக்குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள். தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி,**